**09.09.2025**

**O.S.No.326/2019**

**வா.சா.2 : ஆண்டி**

**<u>5 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

3) வாதி அண்ணாமலையின் அப்பா இறந்து 35 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். அண்ணாமலையின் அப்பா இறந்து 35 வருடங்கள் ஆகும் நிலையில் இதுவரை வருவாய் துறை ஆவணங்கள் அண்ணாமலை பெயரில் மாற்றம் ஆக வில்லை என்று சொன்னால் சரிதான். மாமனார் பெயரில் தான் உள்ளது. எனது மாமனார் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்களை வாதி ஒப்படைத்துள்ளாரா என்றால் ஒப்படைத்துள்ளார். தாவா சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேன்.

4) மேற்படி தாவா சொத்தில் 4 சர்வே எண்கள் உள்ளது. அதில் ஆற்றுக்கு தெற்கில் ஒரு சொத்து உள்ளது. அந்த சொத்து கல்லாங்குத்திற்கு கிழக்கில் உள்ளது. அந்த சொத்தின் பிச்சான் நிலத்திற்கு கிழக்கில் உள்ளது. அந்த சொத்து பெரியபையனுக்கு சம்மந்தப்பட்ட காட்டிற்கு வடக்கில் உள்ளது. மற்றொரு சர்வே எண்ணில் உள்ள சொத்து பிள்ளையார் கோவிலுக்கு கிழக்கில் உள்ளது. இரண்டாவது சொத்து கல்லாங்குத்திற்கு தெற்கே உள்ளது. அந்த சொத்து பிச்சான் காட்டிற்கு மேற்கில் உள்ளது. பெரியபையன் காட்டிற்கு வடக்கில் உள்ளது. மற்றொரு சொத்து தீர்த்தகிரி காட்டிற்கு கிழக்கில் உள்ளது. அண்ணாமலை காட்டிற்கு தெற்கில் உள்ளது. பெருமாள் காட்டிற்கு மேற்கில் உள்ளது. அண்ணாமலை காட்டிற்கு வடக்கில் உள்ளது என்றால் சரிதான்.

5) இந்த வழக்கில் உள்ள சொத்து ச.எண்.156/5 ல் 34 செண்ட் சடையன் என்பவர் பெயரில் தான் உள்ளது. 2,3 பிரதிவாதிகளின் அப்பா 28.01.1961 அன்று பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் மூலமும் மற்றும் கிரயத்திற்காக வாங்கிய சொத்துக்கள்

தான் என்றால் சரிதான். வாதி எனக்கு சொந்த அக்கா கணவர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.09.09 18:02:28 +0530

**Subordinate Judge, Attur.**